அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்-கொழும்பு.7
30.மார்ச்சு,1988.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

பிணி லீவு.

நாபனக் கோவை - அத்தியாயம் X11

உபபிரிவு 6.1ஐ நீக்கிவிட்டு அதனிடத்தில் பின்வருவதைப் பதிலிடு செய்க:

"6.1 நோய்காரணமாக லீவுக்கு விண்ணப்பிக்கும்போது அல்லது பிணி காரணமாக ஓர் உத்தியோகத்தர் அலுவலகத்துக்கு இரண்டு

நாட்களுக்கு மேல் வரமுடியாதவிடத்து அவ்வுத்தியோகத்தர் மிகவும் அண்மையிலுள்ள அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு தம்மைப் பரிசோதிப்பித்தல் வேண்டும். அம் மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவப் படிவம் 170-இல் அல்லது ஆயுள்வேதப் படிவம் -44இல் அத்தாட்சிப் படிவம் ஒன்றை அவ்வுத்தியோகத்தர் வேலை செய்யும் திணைக்களத்தின் அல்லது உப அலுவலகத்தின் தலைவருக்கு அனுப்புவார்.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.